செ.வெ.எண்: 06 நாள்:03.09.2020

**கரூர் மாவட்டம்**

**கரூர் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் கல்வி விடுதிகளில் காலியாக உள்ள சமையலர் பணியிடங்களுக்கு தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப.,அவர்கள் தகவல்**

அதன் விபரம் வருமாறு:

கரூர் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் கல்வி விடுதிகளில் காலியாக உள்ள சமையலர் பணியிடங்களுக்கு தகுதியுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

ஆண் சமையலர் பணிக்கு 15 காலிப்பணியிடங்கள் உள்ளன. இப்பணிக்கு முன்னுரிமை பெற்றவர் அடிப்படையில், பொதுப்பிரிவில் 1 நபருக்கும், பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில் 1 நபருக்கும், பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில் இஸ்லாமியர் 1 நபருக்கும், ஆதிதிராவிடர் வகுப்பில் 1 நபருக்கும் பணி வழங்கப்படும். மேலும், முன்னுரிமையற்றவர் அடிப்படையில் பொதுப்பிரிவில் 3 நபர்களுக்கும், பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில் 3 நபர்களுக்கும், ஆதிதிராவிடர் வகுப்பில் 3 நபர்களுக்கும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பில் 2 நபர்களுக்கும் பணி வழங்கப்படும்.

பெண் சமையலர் பணிக்கு 6 காலிப்பணியிடங்கள் உள்ளன. இப்பணிக்கு முன்னுரிமைப் பெற்றவர் அடிப்படையில், பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில் இஸ்லாமியர் 1 நபருக்கு பணி வழங்கப்படும். முன்னுரிமையற்றவர் அடிப்படையில் பொதுப்பிரிவில் 1 நபருக்கும், பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில் 1 நபருக்கும், ஆதிதிராவிடர் வகுப்பில் 2 நபர்களுக்கும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பில் 1 நபருக்கும் பணி வழங்கப்படும்.

ஆண் சமையலர் மற்றும் பெண் சமையலர் ஆகியோருக்கு அரசாணை எண். 303, நிதித்துறை, நாள்.11.10.17-ன் படி புதிய ஊதியம் ரூ.15,700 மற்றும் இதர படிகள் வழங்கப்படும்.

மேற்கண்ட சமையலர் (ஆண் மற்றும் பெண்) காலிப்பணியிடங்கள் நேர்காணல் மூலம், இனச்சுழற்சியின் அடிப்படையில் நிரப்பப்பட உள்ளது. இதற்காக பின்வரும் தகுதியுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. தமிழில் எழுத, படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

2. சைவ மற்றும் அசைவ உணவு வகைகள் தரமாகவும், சுவையாகவும் சமைக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

3. **வயது வரம்பு:** 01.07.2020 தேதியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் -18 வயது முதல் 35 வயது வரையிலும், பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில் இஸ்லாமியர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு 18 வயது முதல் 32 வயது வரையிலும், இதர பிரிவினர் 18 வயது முதல் 30 வயதிற்கு மிகாமலும் இருக்க வேண்டும். அரசு விதிமுறைகளில் அனுமதிக்கப்பட்டவாறு வயது வரம்பில் தளர்வு அளிக்கப்படும்.

4. 2015-2016ஆம் ஆண்டு முதல் 2018-2019 ஆம் ஆண்டு வரை சமையலர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம் முறைக்காக நாளிதழ்களில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் மூலம் பெறப்பட்ட விண்ணப்பங்கள் நிர்வாக காரணங்களுக்காக இரத்து செய்யப்படுகிறது.

மேற்படி தகுதிகளுடன் கரூர் மாவட்டத்திலுள்ள விடுதிகளில் முழுநேர சமையல் பணி புரிய விருப்பம் உள்ளவர்கள், உரிய விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்தும், உரிய சான்றுகளின் நகல் இணைத்தும், சமீபத்தில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒட்டி அதனை கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைந்துள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் 07.09.2020 முதல் 18.09.2020 தேதிக்குள் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. காலதாமதமாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மற்றும் முகவரி தவறாக இருந்து, அழைப்பாணை திரும்ப பெறப்படும் விண்ணப்பங்கள் ஆகியவற்றின் மீது அரசு பரிசீலிக்காது எனவும் மனுதாரரே முழுப்பொறுப்பு எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலவலர், கரூர்.**